DINAMALAR (8/12/14)

# புதுச்சேரியில் தேசிய நூலக மாநாடு அப்துல் கலாம் துவக்கி வைக்கிறார்

புதுச்சேரி, டிச. 8–

புதுச்சேரியில் நடக்கும், தேசிய நூலக மாநாட்டை, முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் நாளை (9ம் தேதி) துவக்கி வைக்கிறார்.

புதுச்சேரியில் உள்ள பிரெஞ்சு இன்ஸ்டியூட் நிறுவனம், டில்லியில் உள்ள டெல்நெட் நிறுவனத்துடன் இணைந்து, 'அறிவு வளர்ச்சி, நூலகவியல் மற்றும் தகவல் கூட்டமைப்பு' என்ற தலைப்பில், மூன்று நாள் மாநாட்டினை, ஆனந்தா இன் ஓட்டலில் நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

மாநாடு குறித்து டெல்நெட் இயக்குனர் எச்.கே.கவுல் நிருபர்களிடம் கூறியதாவது:

சமுதாய வளர்ச்சிக்கு நூலகங்கள் அடிப்படையானவை. அனைத்து நூலகங்களையும் ஒருங்கிணைத்து, ஒரு மையத்தின் கீழ் கொண்டு வருதல், மின்மயமாக்கம், நூலகங்களை எளிமையாக்குதல் என்ற நோக்கத்தின் அடிப்படையில், மூன்று நாள் மாநாடு நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

நாளை (9ம் தேதி ) காலை 10:00 மணிக்கு, முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் மாநாட்டை துவக்கி வைத்து, சிறப்புரையாற்றுகிறார். பிரெஞ்சு ஆய்வு நிறுவன இயக்குனர் பெர்ரிகார்ட் தலைமை தாங்குகிறார்.

இந்த மாநாடு, நூலகங்களுக்கு இடையே தொடர்பு உருவாக்கத்தையும், நூலகத் தகவல் பரிமாற்றத்தையும் மையப்படுத்தி அமையும்.

இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் பிரான்ஸ் நாட்டில் இருந்தும், இந்தியாவில் பல்வேறு கல்வி நிறுவனங்களில் இருந்து 350ம் மேற்பட்ட அறிஞர்கள், மாணவர்கள் பங்கேற்கின்றனர். நூலக பயன்பாடு குறித்த கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு எச்.கே.கவுல் கூறினார்.

பேட்டியின்போது, சங்கீதா கவுல், அனுரூப்நாயக், ஆனந்த்பக்கிங் உடனிருந்தனர்.